திரு. பி. வேலுசாமி : இந்த திருப்பூர் பால் சொசைடியானது வெகு காலமாக நடந்து வருகிறது. இதற்கு வருஷா வருஷம் மானியம் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதுவரை மானியத்தைக் கொண்டு வாங்கப்படுகிற கால்நடைகளில் எத்தனை உயிரோடு இருக்கின்றன ? எத்தனை இறந்து விட்டன ?

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூல வினாவை ஒட்டியதாக இல்லை.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) பல்லடம் வட்டத்தில் கடன், கிஸ்தி வசூலைத் தள்ளி வைத்தல்

திரு. கே. என். குமாரசாமி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இச் சபையில் கொண்டுவர முன்னறிவிக்கை கொடுத்திருக்கின்றேன் :

"கடந்த பல மாதங்களாகப் பல்லடம் தாலூகாவில் பருவ மழை தவறிவிட்டதால் பஞ்ச நிலைமையேற்பட்டு கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயம், கால்நடை, ஜீவனம், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை, இவை எல்லாம் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் விவசாயிகளின் கடன் கிஸ்தி வசூல் செய்வதில் நிர்பந்தப்படுத்துவது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பிரதேசத்தில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து கடன், கிஸ்தி எல்லாம் வசூல் செய்து வருகிறார்கள். அதைக் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்படுகிறார்கள். இதை யெல்லாம் வசூலிக்காமல் வருகின்ற வருஷம் வரை தள்ளிப் போடுவது நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல்லடம் தாலூகாவில் பருவ மழை தவறியதோடு கூட, வழக்கமாகவே செழிப்பான கோவை மாவட்டத்தில் மிகத் துயரமான நிலைமைக்கு ஆளாகிறவர்கள் பல்லடம் தாலூகா மக்கள் செழுமையான காலத்தில் கூட அங்கு சிரமங்கள் அதிகம். கனம் உறுப்பினர் அவர்கள் இது பற்றிய தம்முடைய கருத்தை கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதத்தின் போதும், ஒரு மாத காலம் நடைபெற இருக்கிற பட்ஜட் கூட்டத்தின் போதும் தெளிவாக எடுத்துக் கூறலாம். அங்குள்ள நிலைமைகளை, சிரமங்களைப் பற்றிக் கண்டிப்பாக எடுத்துச் சொல்ல எல்லா விதமான உரிமையும் உண்டு. அரசாங்கமும், பல்லடம் மாவட்டம் மட்டுமல்லாமல் சிரமங்கள் இருக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் அந்தச் சிரமங்களைப் போக்கும்

வகையில் அதற்கான காரியங்களைச் செய்ய என்றைக்கும் தயாராக இருக்கிறது. ஆனால் இது ஒத்தி வைப்புத் தீர்மானங்களின் விதி முறைகளுக்கு உட்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தின் மீது பேரவையை ஒற்றிவைக்கத் தேவையில்லை.

(ii) **திண்டுக்கல் மாணவர்கள் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம்**

* **திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. சி. சுப்பிரமண்யம் அவர்கள் மாணவர்கள் பற்றிச் சொன்ன தவறான கருத்துக்களுக்குத் தங்களது அதிருப்தியை அமைதியாகத் தெரிவித்துக் கொண்ட திண்டுக்கல் நகர் மாணவர்கள் மீது 10-2-1968-ம் தேதி போலீசாரால் தடியடிப் பிரயோகம் நடந்துள்ளதால் இப் பகுதி மாணவர்கள் மத்தியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதுபற்றி விவாதிக்க இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோருகிறேன்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படித் தமிழக அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டது என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : திண்டுக்கல் விஷயமாக ஏற்கனவே நான் ஒற்றிவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி இங்கே கேட்க முடியாது.

திரு. என். வரதராஜன் : பொதுவாக, சாதாரணமாகத் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காக சுமார் 50 மாணவர்கள் காலை எட்டு மணிக்குத் திண்டுக்கல் நகரத்தில் திரண்டு வந்திருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பற்றிச் சொன்ன சில தவறான கருத்துகக்ளுக்காகத் தங்களுடைய அதிருப்தியைக் காட்ட வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். அவர்களை நிர்ப்பந்தமாக வெளியேற்ற வேண்டுமென்று சுப்பிரமணியம் கட்சியைச் சேர்ந்தவர்கள் முயற்சித்ததன் காரணமாக போலீசார் தலையிட்டு தடியடிப் பிரயோகம் நடந்தது. அதன் காரணமாக அந்த ஐம்பது மாணவர்கள் திரும்பிச் சென்று கல்லூரி மாணவர்கள், உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் என்று ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திரட்டிக் கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் காரணமாக மீண்டும் தடியடி ஏற்பட்டு 14 வயதுக்குட்பட்ட 50 மாணவர்கள்